**I ADDL. DISTRICT & SESSIONS COURT, VELLORE**
**DEPOSITIONS OF WITNESSES**
**(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)**
**DEPOSITIONS OF WITNESSES P.W.3**
**OS.NO.129/2019**

Name : முருகன்

Father/Husband Name : சின்னகுழந்தை

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 27.06.2024

இரு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

குறுக்கு விசாரணை

இந்த வழக்கு விவரங்கள் எனக்கு நன்றாக தெரியும். வழக்கு சொத்து விவரம் எனக்கு தெரியாது. வழக்கு சொத்து கோவிந்தசாமி என்பவருக்கு முழுமையாக பாத்தியப்பட்ட சொத்து என்றால சரிதான். கோவிந்தசாமி பாகம் பிரித்த விவரம் எனக்கு தெரியாது. சாமிநாதன், சண்முகம் மற்றும் மூர்த்தி ஆகியோர்கள் தனித்தனியாக சொத்தை அனுபவித்து விவரம் எனக்கு தெரியாது. அதிகமான கொரோனா காலகட்டத்தில் நான் பூங்கொடிக்கு சொந்தமான கிணற்றில் தூர்வார சென்றிருந்தேன் தேதி, மாதம் மற்றும் வருடம் நினைவில் இல்லை. சாமிநாதனுக்கு பாகம் வந்த சொத்தில் சாந்தியின் மருமகள் சுமதிக்கு 30 செண்ட் செட்டில்மெண்ட் எழுதிக்கொடுத்த விவரம் தெரியுமா என்றால் தெரியாது. சாமிநாதன் சண்டை போட்டுக்கொண்டு அவரது தம்பி சண்முகத்தை கூப்பிடவந்தார் அப்போது நான் சண்டை போடாதீர்கள் என்று சாமாதப்படுத்தினேன். அப்போதுெ சாத்து எல்லாம் கொடுக்கமுடியாது நீ அவங்க பக்கம் தான் பேசுவாய் என்ன செய்கிறார்களோ செய்து கொள்ளட்டும் என்று சொல்லிவிட்டு போய்விட்டார்.

அதன்பிறகு நடந்தது எனக்கு தெரியாது. என் பிரமாணவாக்குமூலத்தில் சொல்லப்பட்டுள்ள விவரங்கள் எல்லாம் சரிதான். அவர் கோர்ட்டுக்கு போவதாக சொன்னார். நான் பொய்சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பித்து சரி என்று ஒப்புக்கொண்டு கையெழுத்திட்டார்.

G SANTHI Digitally signed by G SANTHI

முதலாவது கூடுதல் அமர்வு நீதிபதி,
வேலூர்.